எண்.118/2026 நாள்:09.10.2026

தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003
செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய பதவிகளுக்கு (அறிவிக்கை எண். 10/2025, நாள் 13.06.2025 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) நடைபெற்ற தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 27.02.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய கீழ்கண்ட பதவிகளுக்கான ஏழாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை – 600 003 – ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் 22.10.2026 முதல் 23.10.2026 வரை நடைபெற உள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு நாள்: 22.10.2026 மற்றும் 23.10.2026	தொழில்நுட்ப உதவியாளர் (அமைப்பியல்), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (பதவிக் குறியீடு – 3549), தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (பதவிக் குறியீடு – 3550), தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்), தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட் (பதவிக் குறியீடு – 3591) இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு மற்றும் தானியக்கம்) (பதவிக் குறியீடு – 3636), இளநிலை எரிப்பாளர் பதவிக் குறியீடு – 3651), இளநிலை தொழில் வினைஞர் (மின் பணியாளர்) (பதவிக் குறியீடு – 3659, 3683, 3684, 3685, 3686, 3687, 3688), இளநிலை தொழில் வினைஞர் (பொருத்துநர்) (பதவிக் குறியீடு – 3657, 3699, 3700), இளநிலை தொழில் வினைஞர் (கம்மியர் மோட்டார் வாகனம்) (பதவிக் குறியீடு – 3655, 3689, 3690, 3691, 3692, 3693, 3694), இளநிலை தொழில் வினைஞர் (தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் கம்மியர்) (பதவிக் குறியீடு – 3661), இளநிலை தொழில் வினைஞர் (பற்றவைப்பவர்) (பதவிக் குறியீடு – 3658,

	3695, 3696, 3697), இளநிலை முதலாள் (தொழிற்சாலை) (பதவிக் குறியீடு– 3652), இளநிலை தொழில் வினைஞர் (டீசல் கம்மியர்) (பதவிக் குறியீடு– 3656) மற்றும் இளநிலை தொழில் வினைஞர் (உலோகத்தகடு) (பதவிக் குறியீடு–3660)

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏழாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு/ மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக் குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். ஏழாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு/ மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E–mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏழாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, ஏழாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி ஏழாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்